**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S.No. 166/2021</u>**

**<u>நாள்.27.01.2026</u>**

**<u>வா.சா. 1</u>- கிருஷ்ணசாமி**

**<u>4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசார ணை</u>**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நடப்பதற்கு பாதை கேட்டு வழக்குப் போட்டுள்ளேன். வழக்குச் சொத்து எனக்கு எப்படிப் பாத்தியப்பட்டது என்றால் என் அப்பா கிரையம் மூலமாக வாங்கி பாத்தியப்பட்டது. வழக்கு தபசில் சொத்து சர்வே எண்.297/2 மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 46 சென்ட் புஞ்சை என்றால் சரிதான். சர்வே எண்.297/2 மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 46 சென்ட் புஞ்சையில் எவ்வளவு இடம் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் 42 சென்ட். மீதி இடங்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் மற்ற நபர்கள் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் கிரையம் பெறப்பட்ட 42 சென்ட் காலியிடமாக உள்ளதா என்றால் இல்லை குடியிருப்பு வீடுகளாக உள்ளது. எனது வீட்டிற்கான வரைபடம், பட்டா இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா, வரைபடம் உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.297/2 நத்தமாக உட்பிரிவு செய்யப்படும்போது சர்வே எண்.297/2 A முதல் சர்வே எண்.297/2L3 வரை உட்பிரிவானது என்றால் சரிதான். சர்வே எண்.297/2 நத்தமாக உட்பிரிவு செய்யப்படும்போது சர்வே எண்.297/2J வருவாய்த்துறை ஆவணங்களின் படி பாதையாக உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலமாக அளவீடு செய்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே எண்.297/2J வருவாய்த்துறை ஆவணங்களின் படி யார் பெயரிலும் வகைபாடு செய்யாமல் காலியாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.297/2J காலியிடத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியுள்ளதாக நான் வழக்குப் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் சர்வே எண்.297/2J காலியிடத்தில் 0.00.68 சதுர மீட்டர் (சென்ட் 1.68 அளவில் ) வீடு கட்டப்பட்டு இருப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.297/2J காலியிடத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியுள்ளதாக அதை அகற்ற 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு மனு கொடுத்தேன் என்றால் சரிதான். சர்வே எண்.297/2J 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு மனு கொடுத்தார்கள் என்றால் தெரியாது அது பொதுப்பாதை. அந்த சமயத்தில் சர்வே எண்.297/2J காலியிடத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியுள்ளதாக அதை அகற்ற இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சர்வே எண்.297/2J புலப்படம் மற்றும் வருவாய் ஆவணங்களில் காலியிடமாக இருப்பதால் ஆக்கிரமிப்புகளை அகற்ற முடியாது என மனுவை முடித்துவிட்டார்கள் என்றால் பஞ்சாயத்தில் முறையிட்டோம் நீதிமன்றம் மூலமாக பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். வழக்கு தபசில் சொத்து மீது எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் அனுபவம் தொடர்பாக பிரச்சனை உள்ளது அதனால் 4 முதல் 7 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு 4 முதல் 7 பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.\

<u>4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>மறுவிசாரணை இல்லை.</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.27 17:38:57 +0530